Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஞு வைகாசி ௴ 30 உ வியாழக்கிழமை (13-06-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 191

# நெருக்குதல்களின் மத்தியிலும் எம் தனித்துவம் பேணுவோம்!

## முத்தமிழ் விழா இன்று யாழ். நகரில் ஆரம்பம்

கடந்த ஏழு தினங்களாக நடைபெற்ற முத்தமிழ் விழா வுக்கு மகுடம் வைத்தாற் போல இன்று யாழ். முற்ற வெளி மாவீரர் அரங்கில் முத்தமிழ் விழா இறுதிக்கட்ட நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன.

இந்த விழாவையொட்டி யாழ். நகரமே இந்திர லோகம் போலக் காட்சியளிக்கிறது.

யாழ். முற்றவெளியில் சுமார் 100 அடி உயரமுடைய மேடை அமைக்கப்பட்டுள்ளது.

1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டின் பின்னர் முதற்தடவையாக யாழ் நகரம் வரலாறு கண்டிராத மகிழ்வும் ஒரு விழாவுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

யாழ் நகரம் பகுதியில் சுமார் 25 வளைவுகள் வரை அமைக்கப்பட்டுள்ளன. எங்கும் மின்சார அலங்காரங்கள், வண்ணச் சோடனைகள் கண்ணைப் பறிக்கின்றன. [இ-3-15]

## நெல்லியடி விழாவில் மாத்தயா அறைகூவல்

- நெல்லியடியிலிருந்து பா. இரகுநாதன், கே ஜி. லிங்கம் -

நெல்லியடி, ஜூன் 13

"நெருக்குதல்களின் மூலம் எங்களை அடக்கி விடலாம் என்று நினைக்கும் ஆக்கிரமிப்பாளருக்கு அந்த நெருக்குதலின் மத்தியிலும் எமது தனித்துவத்தை எம்மால் பேண முடியும் என்பதை இந்த விழா தெளிவுபடுத்தும்"

— இவ்வாறு நேற்று மாலை நெல்லியடியில் நடைபெற்ற முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திர ராஜா (மாத்தயா) தெரிவித்தார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் பெரும் மக்கள் கூட்டத்துக்கு மத்தியில் அவர் உரையாற்றினார்.

மாவீரர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களையும் தேற்றைய விழாவின் போது அவர் வழங்கினார்.

[3ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழ பெரும் கவிஞர்கள் பங்குபற்றும் கவியரங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

தமிழீழத்தின் பெரும் கவிஞர்களான பன்னிரண்டு பேர் பங்குபற்றும் கவியரங்கு இன்று யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள மாவீரர் கலை அரங்கத்தில் இடம் பெறுகிறது.

கவிஞர் இ. முருகையன் கவியரங்குக்கு தலைமை வகிப்பார்.

"நெஞ்சினில் நெருப்பேற்றி வருகின்" என்ற தலைப்பில் கவியரங்கு இடம்பெறும்.

முத்தமிழ் விழாவில் இன்று மற்றும் ஓர் அம்சமாக "தீக்குளிப்போம் தீயிடெரிப்போம்" என்ற நவீன நாடகம் மேடை ஏற்றப்பட இருக்கிறது. முற்றுமுழுதாக பெண் போராளிகளே இந்த நாடகத்தில் பங்கேற்கிறார்கள்.

அத்துடன் கலைஞர் வேல் ஆனந்தனின் ஆடற்கலை நிறுவகம் வழங்கும் "இனி ஒரு விதி செய்வோம்" என்ற நாட்டிய நாடகமும் இடம்பெறுகிறது. [இ]

## சுவிஸ், செக்., யூகோ. நாடுகளுக்கு தீர்வுகாண உதவுமாறு அழைப்பு!

### ஸ்ரீலங்கா அரசு விடுத்திருப்பதாகத் தகவல்

கொழும்பு, ஜூன் 13

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவுமாறு ஐரோப்பிய நாடுகள் மூன்றுக்கு ஸ்ரீலங்கா அரசு அழைப்பு விடுத்திருக்கிறது.

அனைத்து அரசியல் கட்சிகளின் மாநாட்டில் கலந்து கொண்டு உதவும்படி சுவிட்சர்லாந்து, செக்கோஸ்லோவேகியா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளின் தூதர்களுக்கு ஸ்ரீலங்கா அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சம்பந்தமாக இனிமேல் நடக்கும் பேச்சுவார்த்தைகள் ஐரோப்பிய நாடு ஒன்றில், நடக்கவேண்டும் எனவும், அவற்றின் மத்தியஸ்தத்துடன் நடக்கவேண்டும் என்றும், விடுதலைப் புலிகள் ஏற்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## எர்ஷாத்துக்கு 10 வருட சிறை!

சட்டவிரோதமாக துப்பாக்கிகள் வைத்திருந்த குற்றத்திற்காக பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத்துக்கு பத்து வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நீதியரசர் ஹபிபுல்லா தலைமையிலான விசேட நீதிமன்றம் தனது 33 பக்க தீர்ப்பை நேற்று அளித்தது. வழக்கு விசாரணை 25 நாட்களாக நடந்தது.

தீர்ப்பை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்யப் போவதாக ஜெனரல் எர்ஷாத் அறிவித்திருக்கிறார். [உ-எ]

## முச்சந்தி முரளி



அப்ப...... ராஜீவ் அனுதாப அலையும் வாய்க்காது போல இடக்கு......!

## தூதர் கிளாட்ஸ்ரோன் விவகாரம்:

## ஸ்ரீலங்கா அரசின் மீது பிரிட்டன் கடும் சீற்றம்!

லண்டன், ஜூன் 13

ஸ்ரீலங்காவிலிருந்து முன்னாள் பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாஸ்ரோன் வெளியேற்றப்பட்டது பிரிட்டனுக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தூதர் வெளியேற்றப்பட்ட செயல் முழுக்க முழுக்க அநீதியானது என்று லண்டனில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு கண்டனம் செய்திருக்கிறது.

மனித உரிமை மீறல் குறித்து ஸ்ரீலங்கா அரசின் மேல் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பான பயமே ஸ்ரீலங்கா அரசுக்கு இத்தகைய செயல்களைச் செய்யத் தூண்டுகிறது என்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு ஸ்ரீலங்கா அரசை கடுமையாக விமரிசித்திருப்பதாகவும் வெளிநாட்டு வானொலி தெரிவித்தது.

## சிப்பாய் பலி!

கொழும்பு, ஜூன் 13

கிழக்கு மாகாணம் தொப்பிகலை என்னும் இடத்தில் விடுதலைப்புலிகளுக்கும் அரசப் படைகளுக்கும் இடையே இடம்பெற்ற சண்டையில் அரசப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஷெல் தாக்குதல் தொடர்கிறது

சுழிபுரம், ஜூன் 13

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து மூளாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

செவ்வாய் இரவு இடம்பெற்ற இத்தாக்குதல்களில் இப்பகுதிகளின் சில வீடுகள் சேதம் அடைந்தன.

அதே சமயம் நேற்றும் காரைநகர் ... தாக்குதல்கள் இப்பகுதியில் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-15-28]

## தாண்டிக்குளம் தாக்குதல் :

## ஹெலி ஓட்டுநர் மீது வழக்கு தொடர அரசு மறுப்பு

கொழும்பு, ஜூன் 13

பிரெஞ்சு வைத்தியக் குழு [எம். என். எவ்] மீது, தாண்டிக்குளத்தில் வைத்துத் தாக்குதல் நடத்திய ஹெலிக்கொப்டர் ஓட்டுநர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும் என்று பிரெஞ்சுக் குழுவினர் அரசாங்கத்திடம் கோரியுள்ளனர்.

ஆனால் குழுவினரின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்து விட்டதாக அதனுடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து அறியவந்துள்ளது.

அரசாங்கம் நியமித்த தனிநபர் ஆணைக்குழுவின் அறிக்கையிலும், எம். என். எவ். குழு சமர்ப்பித்த அறிக்கையிலும் குழு உறுப்பினர்கள் மீது ஹெலிக்கொப்டரே தாக்குதல் நடத்தியது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அறுதிப் பெரும்பான்மை இ. காங்கிரஸ் பெறாது!

புதுடில்லி ஜூன் 13

இந்தியத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது.

இந்தியத் தேர்தல் குறித்து "த டைம்ஸ் ஒப் இந்தியா" தினசரி நேற்று வெளியிட்ட கருத்துக்கணிப்பு இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு 233 ஆசனங்கள் கிடைக்கும் என்று அதில் வாக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தனியாக ஆட்சி அமைக்க ஒரு கட்சிக்கு 257 ஆசனங்கள் கிடைக்க வேண்டும்.

இதே வேளை 34 சதவீதமானோர் திருமதி சோனியா காந்தி பிரதமராக வருவதையும், 17 சதவீதமானோர் திரு. வி. பி. சிங் பிரதமராவதையும், 14 சத வீதமானோர் திரு நரசிம்மராவ் பிரதமராவதையும் விரும்புகின்றனராம். [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சுத்த இன பொமனேரியன் நாய்க்குட்டிகள் ஒரு மாதம் முடிவடைந்த ஆண், பெண் குட்டிகளும், நான்கு மாதம் முடிவடைந்த ஒரு சோடி ஆண், பெண் குட்டிகளும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். முருகதாஸ், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆண்கள் பாடசாலை முன்பாக. [17170]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைவாலையம், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார், வேலணை வைத்தியர் இ. இராசரத்தினம், 121, 2ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம். [4999]

### டைப்ரைட்டர்

Typewriters: Portable-Standard தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. மற்றும் Typewriters சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். FUDO: 89/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-0152]

## தொழிற்கட்சி ஆதரவு பெருகுகிறது

லண்டன், ஜூன், 13

பிரிட்டனில் தொழிற் கட்சியின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

'ஐ. சி. எம்' நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பின் படி, தொழிற்கட்சியை 40.4 சதவீதமானோர் ஆதரிக்கின்றனர் என்று தெரியவந்துள்ளது.

ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியை 34 சதவீதமானோரும், லிபரல் — ஜனநாயகக் கட்சியை 17 சதவீதமானோரும் ஆதரிக்கின்றனர் என்றும் கருத்துக்கணிப்பின் இருந்து தெரிய வந்துள்ளது. [இ-எ]

## ஸ்ரீநகர் மோதலில் 30 பேர் பலி

ஸ்ரீநகர், ஜூன் 13

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் நடந்த செவ்வாய் தீவிரவாதிகளுக்கும் அரசுபடைகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்தது.

இதனிடையில் பாகிஸ்தானில் இருந்து காஷ்மீருக்குள் ஊடுருவ முயன்ற 6 தீவிரவாதிகளை இந்திய இராணுவம் சுட்டுக் கொன்றதாக கூறப்பட்டது. [இ-எ]

## 150 இலங்கையர் இதுவரை கைது

சென்னை, ஜூன் 13

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாக தமிழகத்தில் 150 இலங்கைத் தமிழர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## பொலிஸார் சுட்டு ஒருவர் மரணம்

சென்னை, ஜூன் 13

தமிழ்நாடு - காழம்பூர் பொலிஸ் நிலையத்தைத் தாக்கிய கும்பல் ஒன்றின் மீது பொலிஸார் சுட்டதில் ஒருவர் உயிரிழந்தார். கும்பலின் தாக்குதல் காரணமாக பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட 5 பொலிஸார் காயமடைந்தனர். 3 பொலிஸ் வாகனங்கள் சேதமடைந்தன. [இ-எ]


# முத்தமிழே நீ வாழி

***

திருமறைக் கலா மன்றம்

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

[சி-0111]



# *English Assistant Teachers*

போட்டிப் பரீட்சைக்கான

துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 17 - 06 - 1991

Lectures By KANDIAH NAVARENDRAN

Fees 150/-

Cyclostyled Notes & Past Papers இலவசம்

முக்கிய குறிப்பு:
G.C.E.O/L இரண்டு தடவைகளில் சித்தியெய்தியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 14 - 06 - 1991

★ விண்ணப்பப்பத்திரத்தையும், விபரக் கோவையினையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(O L R தேவாலய சேர்ந்தப் பக்கம்)

16, 3rd Cross Street,

Jaffna.

[சி-0108]


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் அ. வ. பாலசுப்பிரமணியம்

B. A., Trained Graduate L. T. (Scouts)

(முன்னாள் தலவாக்கலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர்)

அன்னையின் மடியில்: 26-08-1929

ஆண்டவன் அடியில்: 31-05-1984

திதி: 13 — 06 — 1991

எமைவிட்டு நீர் பிரிந்து ஏழாண்டு சென்றதப்பா
என்றாலும் உளமதில் ஏற்றமுற வீற்றுள்ளீர்
உமையென்றும் நாம் மறவோம் உலகம் உள்ள வரை

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மனைவி, பிள்ளைகள்.

அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம். [17014]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் சவரிமுத்து நியூமன்

மலர்வு: 13 - 01 - 1967

உதிர்வு: 13 - 06 - 1989

உமது பிரிவால் துயருறும்:

குடும்பத்தினர்,

12/3, மடம் வீதி,
யாழ்ப்பாணம். [17006]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 29 — 05 — 1968



மறைவு: 13 — 06 — 1989

அமரர்

### கிருஷ்ணபிள்ளை ஜெயானந்தன்

எங்கள் அன்புச் செல்வமே - நீ
பிரிந்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவு என்றும்
எங்களை விட்டு அகலாது!

உன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்:

அப்பா, அம்மா,
அண்ணா, அக்காமார், அத்தான்மார்,
தங்கை.

இராஜ வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. [17100]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 07 — 04 — 1973



மறைவு: 30 — 04 — 1991

### செல்வா

செல்வா! எங்கள் செல்வமே!

மகனே நீ மண்மீட்கும் ஆசையோடு போனாய்
எட்டு நாட்களில் காலன் உன்னைக்
கவர்ந்து விட்டான்!

உன்பிரிவால் துயருறும் வளர்ப்புப் பெற்றோர், யோகீஸ்வரன், இலட்சுமி, ரவி, மாமன், மாமி ஆகியோர் உன் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறார்கள்.

திரு. திருமதி இரத்தினசிங்கம்.

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். [17168]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பந்து அரசிடம்

நிபந்தனைகள் எதுவும் இல்லாமல், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவ தற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகர் ஜேர்மனியில் இருந்து செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்திருக்கிறார். பேச்சுக்களை ஐரோப்பிய நாடு ஒன்றில் வைத்து நடத்தவும் விடுதலைப்புலிகள் சார்பில் விரும்பம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் கடந்த ஆறு மாதங்களாக, அனேகமாக அவர்கள் இந்நிலைப் பாட்டையே கடைப்பிடித்து வருகிறார்கள்.

ஆனால் இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் அது ஒரு திர்க்கமான நிலைப்பாட்டுக்கு வந்ததாக இல்லை; சணம் பித்தம் சணம் வாதம் என்பதுபோல, ஒருக்கால் பேச்சு வார்த்தை என்றும் மறுகால் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும்-புலிகள் அடியோடு ஒழிக்கப்படுவர் - என்றும் நிலை தடுமாறி நிற்கிறது.

பிரேமதாசாவுக்கு அடுத்த படியில் எவரும் இல்லாத நிலையில், அமைச்சர்கள் ஒரு புறம், அதிகாரிகள் மறுபுறமுமாக நேரத்துக்கு ஏற்றமாதிரி ஏதேதோ எல்லாம் புலம்புகிறார்கள்.

அரசின் குரல் தரவல்லவர்களாக வெளியில் கணிக்கப்படும் பிரட்மனும், ரஞ்சனும் ஒருவருக்கு மற்றவர் முரணாகவும் கருத்து வெளியிடுகிறார்கள். இந்த இருவரில் பிரேமதாசா கையில் இருந்து அதிக பொறுப்பு யாரிடம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இன்னும் நிர்ணயிக்க முடியவில்லை.

ரஞ்சன் காலத்தில் பேச்சு வார்த்தைக்கு விதிக்கப்பட்ட பல நிபந்தனைகள் நீக்கப்பட்டு விட்டன. எனினும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் உண்மையான, சரியான பதத்துக்கு அரசு வந்திருப்பதாகத் தென்படவில்லை!

பேச்சுவார்த்தையைத் தொடங்க முடியாமைக்கு ஏதேதோ காரணங்கள் கூறி வந்த அரசினர், இப்போது ராஜீவ் கொலையைச் சம்பந்தப்படுத்துகிறார்கள் -மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல!

இதற்கிடையில், இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை வகுப்பதற்கு அனைத்துக் கட்சி மாநாட்டுக்கு 24 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு முன் தீர்வை — திட்டத்தை — அனைத்துக் கட்சி மாநாடு வகுக்கவில்லை யெனில் அதனால் இயலாத காரியம் என்று எடுத்துக்கொண்டு, அரசாங்கம் ஒரு திட்டத்தை தயாரிக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்த முடிவை அரசாங்கம் எப்போதோ செய்திருக்கலாம். சர்வகட்சி மாநாடு ஒரு காலம் வாங்கும் நடவடிக்கை என்பது எப்போதோ தெரிந்த விடயம். காலம் கடத்தப்பட்டாயிற்று; இப்போது கதை முடிக்கப்படுகிறது. அவ்வளவு தான்!

காலம் கடத்தாமல் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விருப்பம் உண்மையாகவே அரசுக்கு இருந்தால், அது தனது சொந்தத்தீர்வு ஒன்றுடன், நிபந்தனை இல்லாத பேச்சுக்கு முன்வருவது மிக அவசியம். அதற்கான பின்னணியை அரசு உருவாக்குமா? பந்து இப்போது அரசின் பக்கத்திலேயே!

# நெருக்குதல்களின் மத்தியிலும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரு. மாத்தையா தமது உரையில் கூறியதாவது:-

### இதய உணர்வுகளை வெளிப்படுத்த முயல்கிறோம்

இந்த மண்ணில் — மனித இனத்தின் தோற்றம், எங்கள் மூதாதையினரின் வாழ்வுத் தொடரிலேயே ஆரம்பமாகிறது.

அழகான எங்கள் மொழிக்கும், இனத்திற்கும், பெருமைமிக்க நீண்ட வரலாறு இருக்கிறது.

எங்கள் மொழியின் பெருமைக்காகவும், வாழ்வுக்காகவும், எமது கலை வடிவங்களின் வளர்ச்சிக்காகவும், மட்டும், இன்று, நாம் இந்த விழாவை நடாத்தவில்லை.

இந்த விழாவின் மூலம், இந்த மண்ணின் பெருமைகளைச் சொல்ல நாம் விழைகின்றோம். அதே நேரம், இந்த மண்ணின் போராட்ட வாழ்வை, இங்கு வாழும் மக்களின் துன்ப - துயரங்களை, அவர்களின் வெற்றிகளை, மகிழ்வை, ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடத் துடிக்கும் அவர்களின் இதயவுணர்வுகளை, இங்கு நாங்கள் வெளிப்படுத்த முனைந்து நிற்கிறோம்.

### இதுவும் ஒரு புரட்சி

இந்த மண்ணில் ஓடும் இரத்தத்திற்கும் கண்ணீருக்கும் நடுவேதான் முத்தமிழ் விழா இன்று நடைபெறுகிறது. இந்த வேளையில், இந்த மண்ணை மீட்பதற்காக, ஒவ்வொரு நாளும் எங்கோ ஒரு மூலையில் ஒரு போராளி மரணிக்கிறான். அவனின் இரத்தம் தோய்ந்த உடலைச் சுமந்தபடியே, இந்த விழாவை நாம் நடாத்துகின்றோம். இதுவும் ஒரு புரட்சி; இதுவும் ஒரு போராட்டம்!

இந்த விழாவைக் கொண்டாடுவதால் நாம் பெருமை கொள்கிறோம். ஏனெனில், நெருக்குதல்களின் மூலம், எம்மை அடக்கி விடலாம் என்று நினைக்கும் ஆக்கிரமிப்பாளனுக்கு, அந்த நெருக்குதல்களின் நடுவேயும், எம்மால் பாட முடியும், எம்மால் தனித்துவங்களை பாதுகாக்க முடியும் என்பதை இந்த விழா தெளிவுபடுத்தும்.

இன்று நடக்கும் இந்த முத்தமிழ் விழா, இதுவரை நிகழாதது; தமிழர்களின் வரலாற்றில் புதுமையானது. வீரம் நிறைந்ததொரு களத்தில விடுதலையை, சுதந்திரத்தின் பெறுமதியை இந்த விழா வெளிப்படுத்திச் செல்லும்.

### புதிய பரணி

இதுவரை நாளும், நாங்கள் பழங்கால இலக்கியங்களிலேயே தங்கி நின்றோம்! வீரத்தையும், தியாகத்தையும், இராமாயணத்திலும், மகாபாரதத்திலுமே தேடி வந்தோம்; தமிழர்களின் வீரத்தைப் பாடிய, கலிங்கத்துப் பரணியையே திரும்பத் திரும்பப் பாடினோம்; ஆராய்ச்சி செய்தோம்; அதற்கு வேறு வேறு வடிவம் கொடுத்தோம்!

ஆனால் இன்று இந்த அடித்தளம் மாற்றமடைந்துள்ளது.

இந்த மண்ணில் இங்கு வாழும் மக்களின், வீரம் நிறைந்த போராட்டத்தையும், தியாகங்களையும் வேதனைகளையும், பாடுவதற்கு- இலக்கியமாக்குவதற்கு இன்று நாம் தொடங்கி உள்ளோம்.

புதிய பரணிகளும், பாடல்களும் எங்கள் தெருக்கள் எங்கும் கேட்கத் தொடங்கி உள்ளன. எமது கலைவடிவங்கள், போராட்டத்திற்கு புதிய பரிமாணங்களை சேர்க்கத் தொடங்கி உள்ளன.

திசை தெரியாமல், அழிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த, தமிழ் இலக்கியங்களையும் தமிழ் கலைவடிவங்களையும், ஒரு புரட்சிகரமான பாதையில் செல்வதற்கு இந்த மண்ணில் நிலவிய போராட்ட சூழல் உதவியது. அந்த வகையில் எங்கள் விடுதலைப் போராட்டம் நிகழ்த்திய சாதனைகளில், கலைகளுக்கு புதிய வடிவங்களைக் கொடுக்கவும் ஒன்றாகிறது.

### விடுதலைப் பாதை

எங்கள் விடுதலைப் போராட்டம் பல சாதனைகளை சந்தித்துள்ளது; பல மாற்றங்களை நிகழ்த்தியுள்ளது.

போராட்டம் இலகுவானதல்ல; துன்பமும் துயரமும் நிறைந்ததென்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். கல்லிலும் முள்ளிலும், அழிவுக்கும் துயருக்கும் நடுவே எங்கள் உடல்களின் மேலாகதான் விடுதலைப் பாதையில் நாம் மக்களை அணிதிரட்டிச் சென்றோம்.

எமது மக்களின் தியாகங்களும், பங்களிப்புகளும், எமது போராளிகளின் வீரமும் அர்ப்பணிப்புகளும், எங்கள் விடுதலைப் போராட்டத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றன.

இன்று நாம், இன்று அச்சமின்றி நிமிர்ந்து நிற்கிறோம் என்றால், அதற்கு காரணம், தம் வாழ்வை, இந்த மண்ணின் வாழ்விற்காக அர்ப்பணிப்புச் செய்த போராளிகளே ஆவர்.

இந்த மண்ணை நேசித்த போராளிகளால், அவர்களின் தியாகங்களால்தான் இன்று, இந்த மண் உயர்ந்து நிற்கிறது; உலகம் வியக்கத்தக்க வாழ்வு கண்டுள்ளது.

தங்கள் வாழ்வை மறந்து, இந்த மண்ணுக்கு வாழ்வு தேடித்தந்த, அந்த மாவீரர்களின் நிழலிலேதான், நாம் இன்று ஆடுகின்றோம்; பண்ணும் - பரணியும் பாடுகின்றோம்.

இந்த மண்ணுக்காக மரணித்த மாவீரர்கள் ஒவ்வொருவரும் போற்றப்பட வேண்டியவர்களே, இந்த மாவீரர்கள் அனைவரது நினைவாகத்தான் நாம் மாவீரர் நாளைக் கொண்டாடுகின்றோம்.

இந்நாளை எமது தேசிய நாளாகவும் [illegible] படுத்தி [illegible]

நடந்து முடிந்த மாவீரர் நாளில் நாம் ஓர் இலக்கியப் போட்டியை நடாத்தினோம். இந்த இலக்கியப் போட்டி எங்களுக்கு பல விடயங்களை தெளிவுபடுத்தியது. எமது இனம் இலக்கிய வாதிகளின் படைப்புகளில், இந்த மண்ணின் பற்று தெளிவாக தெரிந்தன; இந்த மண்ணின் சுதந்திரத்தை அவாவி நிற்கும், அவர்களது மனவிருப்புகள் வெளிப்படையாகத் தெரிந்தன; எமது சமூகம் எங்கள் விடுதலைப் போரை, எங்கள் தாயக பூமியை போற்றிப் பாதுகாக்கும் என்பதை இதில் பங்கு பற்றிய இளம் கலை, இலக்கியவாதிகளின் உணர்வுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன; தேச பற்று நிறைந்த இந்த இளம் இலக்கியவாதிகளுக்கு பரிசுகளை வழங்குவதில் நான் பெருமைப்படுகிறேன்.

### வரலாற்றுப் பதிவு

இன்று, இந்த முத்தமிழ் விழா, பல செய்திகளை எங்கள் வருங்கால சந்ததிகளுக்காக சொல்லிச் செல்கிறது. உண்மையில் சொல்வதானால், முத்தமிழ் விழா ஒரு வரலாற்றின் பதிவு; இந்த நிழ்கால நிகழ்ச்சிப் போக்குகளின் கவடுகளை வருங்காலத்திற்காக விட்டுச் செல்லும் ஒரு மாபெரும் தடமும் ஆகும்.

இந்த முத்தமிழ் விழாவில், பல கலைஞர்கள் இணைந்து கொண்டதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த வேளையில், இந்த மண்ணில் வாழும், கலைஞர்கள், அறிஞர்கள், இலக்கியவாதிகள் அனைவரும், இந்த மண்ணின் விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்காக — வெற்றிக்காக, அவர்களின் துறைவடிவங்களினூடாக, போராட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன் இந்த முத்தமிழ் விழா மேலும் சிறப்புற வேண்டும் என நான் வாழ்த்துகிறேன்— என்றார்.

[உ]

## ராஜீவ் கொலைக்கு காரணமான

# பெண்ணுக்கு இடம் தந்த தாயும் மகனும் கைது!

சென்னை, ஜூன் 13

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறையின் விசேட விசாரணைக்குழு, நேற்று சென்னை நகரில் 25 வயது இளைஞர் ஒருவரையும் அவரது தாயாரையும் கைது செய்தது.

ராஜீவ் காந்தியை கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் பெண்ணுக்கு தங்க இடமளித்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பெற்றோருடன் சென்றனர்

யாழ்ப்பாணம் ஜூன் 13

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் நேற்று முன்தினம் அனாதரவாக நின்ற மூன்று குழந்தைகளையும் பெற்றோர்கள் அழைத்துச் சென்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

[அ-5]

# ★ முத்தமிழ் விழா ★

## 8 ஆம் நாள் நிகழ்ச்சிகள்
## (13 - 06 - 1991)

இடம்: யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள "மாவீரர் கலை அரங்கம்"

நேரம்: பிற்பகல் 5 30 மணி

### நிகழ்ச்சிகள் விவரம்

★ மங்கள இசை:

நாதஸ்வரம்: திரு. வி கே. கானமூர்த்தி.
திரு வி. கே. பஞ்சமூர்த்தி;

தவில்: திரு. பி கணேசன்,
திரு. ஆர். பாஸ்கரன்.

★ விடுதலைப் புலிகளின் திறப்புரை:

★ சிறப்புரை: புலவர் ஈழத்துச் சிவானந்தன்.

★ முத்தமிழ் விழா மலர் வெளியிடுதல்

★ கவியரங்கு:

பொருள்: நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்.

தலைமை: கவிஞர் இ. முருகையன்

பங்கேற்போர்:

கவிஞர்கள்: திரு. சா. வே. பஞ்சாட்சரம்,
திரு. நாவண்ணன்,
திரு. மு. பொன்னம்பலம்,
திரு. கல்வயல் வே. குமாரசாமி,
திரு. ஜெயசீலன்,
பண்டிதர் வீ. பரந்தாமன்,
திரு. சு. வில்வரத்தினம்,
திரு. காரை சுந்தரம்பிள்ளை,
திரு. பொ. கணேசமூர்த்தி.
திரு. மு வே.யோ. வாஞ்சிநாதன்,
கவிஞர் மைக்.

★ மூளாய் கலாலயம் வழங்கும்
'புலிகளுக்கு மட்டுமா போராட்டம்...?'
(நாட்டிய நாடகம்)

★ விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி தயாரித்த அளிக்கும்:
'திக்குளிக்கோம் திமிட்டெரிப்போம்'
(நாடகம்)

★ கலைஞர் வேல் ஆனந்தன் ஆடற்கலை நிலையம் வழங்கும்
'இனியொரு விதி செய்வோம்'
(நாட்டிய நாடகம்)

## சுவிஸ்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எனவே அறிவித்திருந்தனர்.

அதனை மறைமுகமாக ஏற்பதற்கு முன்னோடியாகவே, அனைத்துக் கட்சி மாநாட்டில் கலந்துகொண்டு உதவுமாறு முன்கண்ட நாடுகளை ஸ்ரீலங்கா அரசு கேட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். [அ-எ]

## ஹெலி--

1] ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளது:

அதனைத் தொடர்ந்தே, சம்பந்தப்பட்ட ஹெலிக்கொப்டர் ஓட்டுநர்கள் மீது வழக்குத் தொடர்ந்து அவர்களுக்கு உரிய தண்டனை வழங்குமாறு எம். எஸ். எவ். அரசிடம் கேட்டிருந்தது


இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை பாரிஸ் சென்ற, வடக்கு - கிழக்கில் பணிபுரிந்த எம். எஸ். எவ். குழு டாக்டர்கள், ஞாயிறன்று அங்கு கூடி, [நாவண்டிக்குளம் சம்பவம், தனிநபர் ஆணைக்குழு அறிக்கை என்பனவற்றை ஆராய்ந்ததாகத்] தகவல் எட்டியுள்ளது.

இலங்கையில் தொடர்ந்து பணி புரிவது குறித்து உடனடியாக முடிவு செய்வதில்லை என்றும்—

தனிநபர் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விடயங்கள் குறித்து ஸ்ரீலங்கா அரசிடம் விளக்கம் கேட்பதெனவும்—

விளக்கம் கிடைத்த பின்னரே தொடர்ந்து பணி புரிவது குறித்து முடிவு செய்வது என்றும் தீர்மானித்ததாக அறியவருகிறது. [ஏ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழீழ தேசிய விருது வழங்கும் வைபவம் கடந்த திங்கட்கிழமை இரவு சாவகச்சேரியில் நடைபெற்றது. தேசிய விருதுகளைப் பெற்ற மாமனிதர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

முதலாவது படத்தில் பத்திரிகைத் துறைக்கான விருதை ''சித்திரன்'' சிவஞானசுந்தரத்துக்கு தலைவர் பிரபாகரன் அணிவிப்பதையும், அருகில் நாடகத்துறைக்கு விருது பெற்ற வி. திருநாவுக்கரசு அமர்ந்திருப்பதையும் காணலாம்.

இரண்டாவது படத்தில் போராட்டப் பங்களிப்புக்காக திரு. காசி நடராசா விருதைப் பெறுகிறார்.

மக்கள் பணிக்குரிய விருதை காலஞ்சென்ற சிவானந்தசுந்தரத்தின் சகோதரியும், போராட்டப் பங்களிப்புக்குரிய விருதை ஆ. இராசரத்தினத்தின் மனைவியும் பெறுவதை அடுத்தடுத்த படங்களில் காணலாம்.

நீதிச் செயலுக்குரிய விருதை கா. அருணாசலத்தின் மகன் பெறுவதையும், மற்றொரு மாமனிதரான கலைஞானி அருகில் இருப்பதையும் கடைசிப் படத்தில் காணலாம்.

[படங்கள்: கே. எஸ். ஆர்] [அ]

# வெடிமருந்து நிலையங்களை 5 நாட்களுக்கு மூட உத்தரவு

சென்னை, ஜூன் 13

தமிழகத்தில் லைஸன்ஸ் பெற்றுள்ள வெடிபொருட்கள் விற்பனை நிலையங்கள் மற்றும் ஆயுதக் கிடங்குகள் முதலியவற்றை இன்று முதல் ஐந்து தினங்களுக்கு மூடிவிட வேண்டும் என்று மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை தமிழகத்தில் தேர்தல்கள் சுமுகமாக நடைபெறுவதை உறுதிப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி திலகவதி இராஜரட்ணம்

[ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி]

திருமதி திலகவதி இராஜரட்ணம் காலமானார். அன்னார் விழிசிட்டியைச் சேர்ந்த அமரர் சுப்பிரமணியம் கந்தப்பிள்ளை-இராசம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், சுதுமலை இராஜரட்ணம் [நூலகர், யாழ் இந்துக் கல்லூரி] அவர்களின் அன்பு மனைவியும், குலானந்தனின் [யாழ். இந்துக்கல்லூரி, உயர்தர மாணவன்] அருமைத் தாயாரும், சிவகடாட்சம் [கணக்காளர், கொழும்பு], லோகேஸ்வரி, செந்தில்மணிதேவி ஆகியோரின் சகோதரியும், டாக்டர் சந்திரவதனி, செந்திலிங்கம், சுதுமலை தெற்கைச் சேர்ந்த காலம் சென்ற கனகசுந்தரம் (தலைவர்) அவர்களின் மனைவி சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு 74, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
பொ. இராஜரட்ணம்
[கணவன்]

74, அரசடி வீதி. [16991]

### திருமதி கமலாசினி கதிரவேற்பிள்ளை

மந்திகை வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி (D. M. O) கதிரவேற்பிள்ளை அவர்களின் அன்பு மனைவி கமலாசினி நேற்றுக் காலை இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் விவேகன் [பொறியியலாளர்], வைதேகி [யாழ். வளாகம்], நிவேதா [மெதடிஸ்த பெண்கள் பாடசாலை], கமலன் [ஹாட்லிக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

ஈமக்கிரியைகள் அவரது ''திரு இல்லம்'' கரவெட்டி மேற்கில் நேற்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. S. கதிரவேற்பிள்ளை

[17169]

### திருமதி இராசையா நாகேஸ்வரி

திருமதி இராசையா நாகேஸ்வரி நேற்றுக் காலமானார். அன்னார் திரு திருமதி இ. கந்தையாவின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற ஆ. இராசையாவின் அன்பு மனைவியும், க. சிவசுப்பிரமணியம் (இலங்கை வங்கி, கொழும்பு], க. சிவஞானராசா [ஞானம் பார்மசி, சுன்னாகம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், மற்றும் சந்திரவதனா, இராசகுணேஸ்வரி, திருமதி பொ. கிருஷ்ணர், திருமதி பொ. சுப்பிரமணியம், திருமதி மூ. நாகலிங்கம், திருமதி மூ. இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரஜிபாலினி, ராஜ்குமார் [U. K.] ராஜ்ரூபன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 13-06-91 வியாழன் காலை 10 மணிக்கு சுன்னாகத்தில் நடைபெறும்.

தகவல்:
க. சிவஞானராசா

Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். [4139]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

முல்லைத்தீவு மாவட்டம் அரிசகுண்டான் ஸ்ரீலங்கா படை முகாம் மீது நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

இந்த தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் போராளிகளான லெப்டினன்ட் சூரி [முல்லைத்தீவு], ரசித் [கிளிநொச்சி] ஆகியோர் வீரமரணமடைந்தனர். [உ-3]

## தபால் அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். மாவட்டத்திலுள்ள தபால் அதிபர்கள், உப தபால் அதிபர்கள் பங்கு பற்றும் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை (வெள்ளி) காலை 9 மணியளவில் யாழ். பிரதம தபாலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு தபாலதிபர்களை வடமாகாண தபால் அதிபர் கேட்டுள்ளார். [உ-5]

## சீமெந்து ஊழியருக்கு சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் மார்ச், ஏப்ரல் மாத சம்பளம் காசோலையாக நேற்று முதல் யாழ் நாவலர் வீதியில் உள்ள நிறுவனக் கிளை தற்காலிக பணிமனையில் வைத்து வழங்கப்படுகின்றது.

அலுவலக நேரங்களில் ஊழியர்கள் தமது காசோலைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. [உ]

## பரீட்சை அடுத்த மாதம்

கொழும்பு, ஜூன் 13

ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் நடத்தப்படும் என கல்விச் சேவைகள் குழு தெரிவித்துள்ளது. [ட-எ]

## இருவர் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

மட்டக்களப்பு மாவட்டம்— பனிச்சங்கேணி முகாம் படையினர் பெரிய தட்டுமுனை கிராமத்தைச் சுற்றிவளைத்து ஆறு தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

இவர்களில் நால்வர் பின்னர் விடுவிக்கப்பட்டனர். மற்ற இருவரும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

# தனியார் கல்வி நிலையங்கள் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

தனியார் கல்வி நிலையங்களின் நடைமுறைப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கான கலந்துரையாடல்களை கல்விக் கோட்ட ரீதியில் நடத்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கல்வி நிர்வாகப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இக் கலந்துரையாடல்களில் பங்குபற்றும்படி தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களுக்கும், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடல்கள் நடைபெறும் தினங்கள், இடங்கள், நேரங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

★ பண்டத்தரிப்புக் கோட்டம்;- இன்று பிற்பகல் 3 மணி—சித்தங்கேணி கணேசவரி வித்தியாலயம்

★ வடமராட்சி:- நாளை பிற்பகல் 3 மணி—நெல்லியடி ம. ம. வி

★ தென்மராட்சி:- திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி—சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

★ மருதனார்மடம்;- 21 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3 மணி—இணுவில் எவரெஸ்ட் கல்வி நிலையம்

★ யாழ்ப்பாணம்;- 24 ஆம் திகதி (திங்கட்கிழமை) பிற்பகல் 3 மணி—நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம். [உ]

## கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

முத்தமிழ் விழாவினை ஒட்டி சிற்ப, ஓவியக் கண்காட்சி ஒன்று நேற்று மாலை 3 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஆரம்பமானது.

ஆரம்ப வைபவத்தில் விடுதலைப் புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் திரு. பேபி சுப்பிரமணியமும் கலந்து கொண்டார்.

சி. சிவஞானசுந்தரம், மூ. கனகசபை, எஸ். ஆர். கனகசபை, பீ. அ. அமிர்தநாதன், ஆ. மாற்கு, கோ. கைலாசநாதன், ஆ. இராசையா உட்பட மற்றும் பல கலைஞர்களின் நூற்றுக்கணக்கான ஓவியங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இன்று முதல் சனி வரையும் பிற்பகல் 2-30 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். [உ-5]

## சுன்னாகம் அந்தோனியார் உற்சவம்

மயிலணி, ஜூன் 13

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை நடைபெறும் திருச்சொரூபப் பவனியுடன் பூர்த்தி அடைகிறது. [இ-89]

## மரண அறிவித்தல்

### செல்வி விந்தியவாசினி நாகேந்திரன்

கனகரத்தினம் வீதி அரியாலையைச் சேர்ந்த செல்வி விந்தியவாசினி நாகேந்திரன் அவர்கள் நேற்று முன்னிரவு காலமாகி விட்டார்கள்.

இவர் நாகேந்திரன் (கிராமசேவையாளர், புத்தூர் வடக்கு) ரதி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், கதிரவேல் (பவளம்)-தங்கமலர் தம்பதிகள், காலஞ்சென்ற கந்தையா - வயிரம்மா தம்பதிகள் ஆகியோரின் அன்புப் பேத்தியும், கிருஷ்ணவாசன் (கிராம சேவையாளர், நவக்கிரி), காலஞ்சென்றமயிலு, பசுபதி, லதா, தோ. வத்சலா (குட்டி) ஆகியோரின் பெறாமகளும், ரஞ்சன் (மாவணசபை, திருகோணமலை) உதயகுமார் (நோர்வே) சாந்தகுமார் (நோர்வே). விஜயகுமார் (மருத்துவபீடம் 4 ஆம் வருடம்), சதீஸ்குமார் ஆகியோரின் மருமகளும், மகேந்திரனின் [ஆசிரியர் வசாவிளான்] ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 13-06-91 மாலை 4 00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகேந்திரன்

[16992]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13 - 06 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org